## அரசு மேல்நிலைப் பள்ளி, பெலாந்துறை.
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## வணிகவியல்

## இரண்டு மதிப்பெண்

1. **மேலாண்மை என்றால் என்ன ?**
   மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது. – ஹென்றி போயல்
2. **மேலாண்மை கருவிகளை பட்டியலிடுக ?**
   கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், பொருளியல், புள்ளியல்.
3. **மேலாளர் என்பவர் யார் ?**
   ஒரு நிறுவனத்தின் மேலாண்மைப் பணியை ஏற்பவர் மேலாளர் ஆவார்.
4. **அதிகாரம் என்பதன் பொருள் தருக ?**
   அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையை குறிக்கின்றது.
5. **மேற்பார்வை வீச்செல்லை என்பதன் பொருள் பொருள் யாது ?**
   ஒரு உயர் அலுவலரால் எத்தனை பணியாளர்களை சிறந்த முறையில் மேற்பார்வை செய்ய முடியும் என்பதைக் குறிப்பதாகும்.
6. **திட்டமிடுதல் என்றால் என்ன ?**
   முன்கூட்டியே திட்டமிடுதலை திட்டமிடுதல் எனலாம்.
7. **செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.**
   செயலூக்கம் என்பது மனித நடவடிக்கைகளை தூண்டக்கூடிய விருப்பங்கள், உணர்ச்சிகள், எண்ணங்கள் ஆகியவை ஆகும்.
8. **பணியாளர்களை யாரால் கட்டுப்படுத்த முடியும் ?**
   பணியாளர்களை மேலாளரால் கட்டுப்படுத்த முடியும்.
9. **ஒருங்கிணைப்பின் பொருள் பற்றி நீங்கள் அறிவது என்ன ?**
   மேலாண்மையின் அனைத்து செயல்பாடுகளும் அமைப்பின் இலக்கை அடையும் வகையில் செயல்படுத்துவது ஒருங்கிணைத்தல் எனப்படும்.
10. **மேலாண்மையின் துணைச் செயல்பாடுகளை பட்டியலிடுக.**
    * புதுமைப்படுத்துதல், * பிரதிநிதித்துவம், * முடிவெடுத்தல், * தகவல் தொடர்பு.
11. **முக்கிய முடிவு பகுதிகள் என்பது என்ன ?**
    முக்கிய முடிவு பகுதிகள் ஒரு அமைப்பின் வலிமையை குறிக்கிறது. இலாபம், சந்தை நிலவரம், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை உதாரணம் ஆகும்.
12. **குறியிலக்கு மேலாண்மையின் குறிக்கோள்கள் என்ன ?**
    * அளவிடுதல் மற்றும் செயல்திறனை மதிப்பிடுதல்.
    * தனிப்பட்ட செயல்திறனை தொடர்புபடுத்துதல்.
13. **நன்கு அமைக்கப்பட்ட துறைகளின் கூறுகள் யாவை ?**
    * ஒழுங்குபடுத்துபவர்கள் * நிதி நிறுவனங்கள் * நிதி சந்தை * நிதி சேவைகள்
14. **நிதிச்சந்தை – சிறு குறிப்பு வரைக.**
    எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துக்கள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதி கருவிகள் வியாபாரம் செய்யப்படுகிறதோ அதுவே நிதிச் சந்தை ஆகும்.
15. **உடனடிச் சந்தை என்றால் என்ன ?**
    ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும்.
16. **கடன் சந்தை என்றால் என்ன ?**
    கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சந்தை ஆகும்
17. **இரண்டாம் நிலை சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது ?**
    வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் கலந்துரையாடுதல் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.
18. **மூலதனச் சந்தை என்றால் என்ன ?**
    நீண்ட கால நிதிக்கோரலுக்கு பங்குகள் பத்திரங்களின் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கூடும் ஒரு இடம் ஆகும்.
19. **பரஸ்பர நிதி என்றால் என்ன ?**
    சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாக மாற்றும் நிதி நிறுவனங்களையே பரஸ்பர நிதி நிறுவனம் என்கிறோம்.
20. **மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார் ?**
    * தனிநபர் * நிறுமங்கள் * அரசு வங்கிகள் * இதர நிதி நிறுவனங்கள்
21. **மூலதனச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது ?**
    பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பு பொறுத்து விலை தீர்மானிக்கப்படுகிறது.
22. **பணச்சந்தை வரைவிலக்கணம் தருக ?**
    பல்வேறு நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களை கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்.
23. **வணிக இரசீது சந்தை என்றால் என்ன ?**
    வணிக ரசீதுகளை வாங்கி விற்கும் இடம் வணிக இரசிது சந்தை ஆகும்.
24. **வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன ?**
    வைப்பு சான்றிதழ்களை வாங்கி விற்கும் இடம் வைப்புச் சான்றிதழ் சந்தை ஆகும்.
25. **அரசு பத்திரங்கள் சந்தை என்றால் என்ன ?**
    அரசு பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசு பத்திரங்கள் சந்தை ஆகும்.
26. **பணச்சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை ?**
    * கருவூல சீட்டுகள் * வணிக இரசிதுகள் * வணிகத்தாள்கள் *அழைப்பு பணம்
27. **பழமையான இரண்டு பணச்சந்தைகளை விவரி ?**
    * இலண்டன் பணச் சந்தை * நியூயார்க் பணச் சந்தை
28. **ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது ?**
    வர்த்தகர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டு பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.
29. **மாறுதல் என்பதன் பொருள் யாது ?**
    ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்வதாகும்.
30. **பங்குச் சந்தை என்றால் என்ன ?**
    பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும்.
31. **துணைத் தரகர் என்றால் என்ன ?**
    இவர் பங்கு மாற்றத்தின் உறுப்பினரின் முகவராக செயல்படுவார். இவர் அதற்காக கழிவு பெறுகிறார்.

**32. ஊக வணிகர்களின் வகைகள் யாவை ?**

* காளை * கரடி * கலைமான் * முடவாத்து

**33. தரகர் என்று யார் அழைக்கப்படுகிறார் ?**

பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையே இடைநிலையாளர்களாக செயல்படுபவர்.

**34. பண்ட மாற்று பரிவர்த்தனை என்றால் என்ன ?**

பண்டமாற்றம் என்பது பாரம்பரிய பொருட்களின் சந்தைகளில் அவற்றை பரிமாற்றம் செய்வதாகும்.

**35. இந்தியாவில் பங்கு வணிக நேரம் என்றால் என்ன ?**

பங்குச் சந்தைகள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமையில் மூடப்படும். பங்குகளுக்கான வர்த்தக நேரம் காலை 9.15 மணி முதல் பிற்பகல் 3.30 வரை செயல்படும்.

**36. தலால் தெரு விளக்குக.**

இந்தியாவில் மும்பையின் மையப்பகுதியில் உள்ள தெருவாகும். இங்கு புகழ்ப்பெற்ற பெரிய பங்குச் சந்தையான பம்பாய் பங்குச்சந்தை உள்ளது.

**37. செபி பற்றி சிறுகுறிப்பு வரைக.**

மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட உயர் அமைப்பு செபியாகும்.

**38. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.**

* பங்குச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவது.
* முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது.

**39. செபியின் தலைமையகம் பற்றி குறிப்பிடுக.**

மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வளாகத்தின் வணிக மாவட்டத்தில் செபியின் தலைமையகம் உள்ளது.

**40. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை ?**

* நிரந்தர கணக்கு எண் * வாக்காளர் அட்டை * ஓட்டுநர் உரிமம்
* வங்கி செல் புத்தகம் * வருமான வரி படிவங்கள் * மின்கட்டண ரசீது

**41. மனித வள மேலாண்மையின் பணிகளை பட்டியலிடுக.**

* திட்டமிடுதல் * அமைத்தல் * இயக்குவித்தல் * கட்டுப்படுத்துதல்

**42. ஆட்சேர்ப்பின் பொருள்தருக.**

ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுக்கும் பணியாகும்.

**43. பதவி உயர்வு என்றால் என்ன ?**

பணி மூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்களை கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு பணிபுரிய அளிக்கப்படும் வாய்ப்பாகும்.

**44. அகவள ஆட்சேர்ப்பின் ஏதேனும் இரண்டு நன்மைகள் கூறுக.**

* உபரி பணியாளர்களை எளிமையான முறையில் பணிமாற்றம் செய்யலாம்.
* இது பணியாளர்களை உற்சாகப்படுத்துகிறது.

**45. வளாக ஆட்சேர்ப்பின் அம்சங்களில் ஏதேனும் இரண்டைக் குறிப்பிடுக.**

* பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் ஒரே இடத்தில் இருத்தல்.
* நேரம் மற்றும் செலவுகள் சேமிக்கப்படுகிறது

**46. புற வள ஆட்சேர்ப்பின் நன்மைகளை பட்டியலிடுக.**

* திறமை வாய்ந்த நபர்களை தேர்ந்தெடுத்தல்.
* நிறுவனத்தின் கொள்கைகளை மாற்றி அமைத்தல்.

**47. தெர்ந்தெடுத்தல் என்றால் என்ன ?**

காலியிடங்களை நிரப்புவதற்காக மிகப்பொருத்தமான மற்றும் திறமை உள்ள விண்ணப்பதாரர்கள் கண்டுபிடித்தல் தேர்ந்தெடுத்தல் ஆகும்.

**48. நேர்காணல் என்றால் என்ன ?**

தேர்ந்தெடுப்பவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுபவர் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து அறிந்து உரையாடுவதாகும்.

**49. சோதனை குறித்து நீவீர் அறிவது யாது ?**

விண்ணப்பதாரர் பணிக்கு தேவையான கல்வித் தகுதி மற்றும் அறிவினை பெற்றவரா என உறுதிபடுத்திக் கொள்ள நடத்தப்படும் தேர்வாகும்.

**50. தன் விளக்கக் குறிப்பு பற்றி நீவீர் அறிவது யாது ?**

விண்ணப்பதாரரின் கடந்த கால அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி சுய தகவல் தருவதாகும்.

**51. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன ?**

இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்க பயன்படுவதாகும்.

**52. பணியமர்த்தல் என்றால் என்ன ?**

முடிவு செய்யப்பட்ட பணியினை ஏற்றுக்கொண்ட விண்ணப்பதாரருக்கு செய்ய வேண்டிய பணியினை ஒதுக்குவதாகும்.

**53. பயிற்சி முறை என்றால் என்ன ?**

ஊழியருக்கு திறன்கள், கருத்துகள் மற்றும் இலக்குகளை அடைய உதவும் அறிவை வளர்ப்பதாகும்.

**54. வழிகாட்டுதல் பயிற்சி முறை என்றால் என்ன ?**

ஒரு பணியாளர் தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் செயல்முறையாகும்.

**55. பங்கேற்று நடித்தல் என்றால் என்ன ?**

பயிற்றுவிப்பாளர்கள் பதவியின் சூழ்நிலையை விளக்குவார். பணியாளர் ஒதுக்கப்படும் பாத்திரங்களாக செயல்பட வேண்டும்.

**56. மின்னணு கற்றல் முறை பற்றி கூறுக ?**

பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில்நுட்ப செயல் முறையில் கற்றுக்கொள்வதாகும்.

**57. சந்தை என்றால் என்ன ?**

வாங்குவோர் மற்றும் விற்போர் ஒருவருக்கு ஒருவர் இணைந்து போட்டியிடும் பகுதியை குறிப்பதாகும்.

**58. பொருட்கள் சந்தை என்பதன் பொருள் யாது ?**

உற்பத்திப் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை நடைபெறும் இடம் பொருட்கள் சந்தை எனப்படும்.

**59. மொத்த விற்பனை சந்தைக்கும் சில்லரை விற்பனை சந்தைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?**

| மொத்த விற்பனை சந்தை | சில்லரை விற்பனை சந்தை |
|---|---|
| பேரளவு வியாபாரம் | சிற்றளவு வியாபாரம் |
| குறிப்பிட்ட சில பொருட்கள் விற்பனை | பல வகையான பொருட்கள் விற்பனை |
| நகரின் மையப்பகுதியில் இருத்தல் | நுகர்வோருக்கு அருகாமையில் இருத்தல் |

**60. சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.**
பொருள் கூறுகள், விலை கூறுகள், இட கூறுகள் மற்றும் விற்பனை மேம்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது.

**61. பண்டங்கள் மற்றும் பணிகளின் விலையை பாதிக்கும் அகக் காரணிகள் இரண்டினை தருக ?**
* பொருட்களின் அடக்கசெலவுகள் * பொருளின் தரம்

**62. பண்டங்கள் மற்றும் பணிகளின் விலையை பாதிக்கும் புற காரணிகள் இரண்டினை தருக.**
* சந்தை மற்றும் தேவை * போட்டிகள் * நுகர்வோர்கள்

**63. மின்னணு வர்த்தகம் அல்லது மின் வர்த்தகம் வியாபாரம் என்றால் என்ன ?**
பண்டகம் மற்றும் சேவைகள் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் மின்னணு வலைத்தளத்தின் வழியாக மேற்கொள்வதாகும்.

**64. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன ?**
சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்வதாகும்.

**65. சேவை சந்தையிடுதல் என்றால் என்ன ?**
தொழில்நுட்பம், சட்டம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின் பயனை ஒருவர் மற்றொருவருக்கு அளிப்பதே சேவை சந்தை எனப்படும்.

**66. மின் சந்தையிடுகை என்றால் என்ன ?**
மின் இணையம், மின்னஞ்சல் போன்ற டிஜிட்டல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி சந்தைப்படுத்தலின் நோக்கங்களை அடைவதாகும்.

**67. வலைதளச் சந்தையிடல் மின்னணு சில்லறை வணிகம் என்றால் என்ன ?**
வலைத்தள கடைகளின் மூலம் நுகர்வோருக்கு மின் இணையம் வழியாக பொருள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதாகும்.

**68. சமூக சந்தையிடுகை என்றால் என்ன ?**
சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் பொருட்களை சந்தைப்படுத்தும் முறையே சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.

**69. நுகர்வோர் என்பவர் யார் ?**
பண்டங்கள் அல்லது பணிகளை மறுவிற்பனைக்கு அல்லாமல் இறுதியாக பயன்படுத்துவோர் நுகர்வோர் ஆவார்.

**70. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.**
* தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலப்பது * மிளகுடன் பப்பாளி விதை சேர்ப்பது

**71. வாங்குபவர் ஜாக்கிரதை என்றால் என்ன ? விழித்திரு கோட்பாடு குறிப்பு வரைக.**
வாங்கிய பொருள் பலனளிக்காவிடில் விற்றவர் பொறுப்பாக மாட்டார். வாங்கியவர் நிவாரணம் கோர முடியாது.

**72. விற்பனையாளர் ஜாக்கிரதை என்றால் என்ன ? விழித்திரு தத்துவம் குறிப்பு வரைக.**
இக்கோட்பாட்டின்படி விற்பனையாளர்கள் தனது பொறுப்பிலிருந்து தப்பிக்க இயலாது. விளம்பரத்தில் உள்ளபடி உத்திரவாதத்துடன் பொருளை விற்க வேண்டும்.

**73. சிறுகுறிப்பு வரைக. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986.**
இது கோப்ரா என்று அழைக்கப்படுகிறது. இச்சட்டம் 15.04.1987 அன்று அமுலுக்கு வந்தது. நுகர்வோர் நலனை பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக கொண்டது.

**74. பாதுகாப்பு உரிமை பற்றி நீவிர் புரிந்து கொண்டது என்ன ?**
நுகர்வோர் தனது வாழ்க்கைக்கு அபாயகரமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிராக பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு.

**75. ஜான் எஃப் கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை ?**
* பாதுகாப்பில் உரிமை * தகவல் பெறும் உரிமை * தேர்ந்தெடுக்கும் உரிமை
* கேட்கும் உரிமை

**76. வணிகத்தின் தலையாய நோக்கங்கள் யாவை ?**
* நுகர்வோர் திருப்திபடுத்துவது * இலாபத்தை பெருக்குவது

**77. தேசிய ஆணையத்தினைப் பற்றி உனக்கு தெரிந்ததை எழுதுக ?**
* இது டில்லியை தலைமையாக கொண்டுள்ளது.
* உச்சநீதிமன்ற நீதிபதியை தலைவராக கொண்டு செயல்படுகிறது.

**78. மாநில ஆணையம் என்ற பதத்தை விவரிக்கவும் ?**
* மாநில அளவில் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம்.
* உயர் நீதிமன்ற நீதிபதி தலைவராக இருப்பார்.

**79. மாவட்ட மன்றம் பற்றி விளக்குக ?**
* மாவட்ட அளவில் இயங்கும் நுகர்வோர் குறை தீர்வு மன்றம்.
* மாவட்ட நீதிபதி இதன் தலைவர் மற்றும் மற்ற துறையிலிருந்து இருவர்.

**80. புகார்களை எவ்வாறு பதிவு செய்யலாம் ?**
* புகார்களை இரண்டு வருடத்திற்குள் பதிவு செய்யலாம்.
* முத்திரைத்தாளில் புகார் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.
* புகார் அளிக்க வழக்கறிஞர்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

**81. உட்புற சூழல் என்றால் என்ன ?**
நிறுவனத்தின் உட்புறத்தை தொடர்புடைய காரணிகளாகும்.

**82. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்றால் என்ன ?**
சரக்குகள் மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் மறைமுக வரி ஆகும்

**83. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன ?**
அரசுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படுவது கலப்புப் பொருளாதாரம் எனப்படும்.

**84. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகள் யாவை ?**
* தாராளமயமாதல் * தனியார்மயமாதல் * உலகமயமாதல்

**85. தனியார்மயமாக்கல் என்றால் என்ன ?**
பொதுத்துறை நிறுவனங்களின் உரிமைகளை தனியாரிடம் ஒப்படைப்பது தனியார்மயமாக்கல் எனப்படும்

**86. தாராளமயமாக்களின் குறைபாடுகள் ஏதேனும் மூன்று குறிப்பிடுக ?**
* வேலையில்லா பிரச்சினை அதிகரித்தல்
* உள்நாட்டு உற்பத்தித் தொழில்கள் பாதிப்பு * சமநிலையற்ற வளர்ச்சி

**87. பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களின் பெயர்கள் யாவை ?**
* ஆயுதம் மற்றும் வெடிமருந்துகள் * அணுசக்தி * கனிம எண்ணெய் * நிலக்கரி

**88. உலகமயமாக்கலின் மூன்று நன்மைகளை எழுதுக ?**
*வெளிநாட்டு ஒத்துழைப்பு கூட்டுதல் *சந்தை விரிவாக்கம் *தொழில்நுட்ப வளர்ச்சி

**89. சரக்கு விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன ?**
விற்பவர் வாங்குபவரிடம் விலை என்ற மறு பயனை பெற்றுக்கொண்டு பொருளின் மீதான உரிமையை மாற்றுவதாகும்.

**90. சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.**
* இருதரப்பினர் * பொருளின் மீதான உரிமை மாற்றம் * சரக்கு * விலை
* விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு

91. **சரக்கு என்றால் என்ன ?**
சரக்கில் அனைத்து அசையும் சொத்துக்களான பங்குகள், பயிர்கள், நற்பெயர், காப்புரிமை, வணிக குறிகள் போன்றவை அடங்கும்.

92. **நிகழ் சரக்கு அல்லது வரு நிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன ?**
இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கை வசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியை பொறுத்தது.

93. **நம்புறுதி என்றால் என்ன ?**
ஒப்பந்தத்தில் ஒரு பொருளுக்கு துணையாக உள்ள கூற்று பகுதிகளாகும்.

94. **மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன ?**
ஒருவர் மறுபயன் பெற்றுக்கொண்டு ஆவணத்தை மற்றொருவருக்கு மாற்றுவதாகும்

95. **மாற்றுச்சீட்டு வரையறை.**
ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஒருவருக்கோ அல்லது அவரது ஆணைக்கோ ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துமாறு நிபந்தனையற்ற முறையில் ஒருவரை ஆணையிடும் ஆவணம் ஆகும்.

96. **கடனுறுதிச் சீட்டின் சிறப்பியல்புகளில் மூன்றினை குறிப்பிடுக**
* இது எழுதப்பட்டிருக்க வேண்டும்.
* இது நிபந்தனை அற்றதாக இருக்க வேண்டும்.
* வருவாய் தலை ஒட்டப் பட வேண்டும்.

97. **காசோலை என்றால் என்ன ?**
வெளிப்படையாக கேட்டாலன்றி வேறு எப்போதும் பணம் தரக்கூடாது என வாடிக்கையாளர் வங்கியின் மீது எழுதப்படுவதாகும்.

98. **மேலெழுதுதல் வரையறு ?**
மாற்றுமுறை ஆவணத்தை எழுதியவர் என்ற நிலையில் அதன் முன்புறமோ அல்லது பின்புறமோ அல்லது இணைத்த ஒரு தாளிலோ கையொப்பம் இடுவதாகும்.

99. **தொழில் முனைவோரின் சிறப்பியல்புகளை இரண்டினைக் குறிப்பிடுக ?**
* தன்னம்பிக்கை * புதுமை புகுத்தல் * நெகிழ்வுத் தன்மை

100. **தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக ?**
*திட்டமிடுதல் *அமைத்தல் *இயக்குதல் *கட்டுப்படுத்தல் *ஒருங்கிணைத்தல்

101. **தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை குறிப்பிடுக.**
* தொழிலின் நோக்கத்தை தீர்மானித்தல் * ஆழ்ந்து பகுப்பாய்வு
* தொழில் துவங்கும் சட்ட முறைகள் * வாய்ப்புகளை கண்டறிதல்

102. **மகளிர் தொழில்முனைவோர் சந்திக்கும் சிக்கல்களை எழுதுக.**
* நிதிப் பிரச்சினை * கல்வியறிவு இன்மை * கடும் போட்டி
* போதிய விவரமின்மை * ஆதரவின்மை

103. **கூட்டுப் பங்கு தொழில் முனைவோரின் மற்றொரு பெயர் என்ன ?**
தோற்றுவிப்பாளர்

104. **தெளிவான தொழில் முனைவோருக்கு உதாரணம் தருக.**
* அம்பானி * சேஷாத்திரி * ஜாம்செட் டாடா * பில்லா * டி வி சுந்தரம் ஐயங்கார்

105. **தொழில் முனைவோரின் வணிகப் பணிகளை கூறுக.**
* உற்பத்தி பணி * சந்தையிடுகை பணி * கணக்கியல் பணி
* நிதிசார் பணி * மனித வளப் பணி

106. **வியாபார தொழில் முனைவோரின் இதர பெயர்கள் என்ன ?**
* உற்பத்தி தொழில் முனைவோர் * வணிகத் தொழில் முனைவோர்

107. **ஏதேனும் நான்கு அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களை எழுதுக**
* ஸ்டாட்டப் இந்தியா * டிஜிட்டல் இந்தியா * இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
* அடல் புதுமை புகுத்தல் திட்டம் * ஜன்தன் ஆதார் மொபைல்

108. **டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.**
இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னனு முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

109. **தமிழக அரசின் தொழில் முனைவோர் திட்டங்களில் ஏதேனும் இரண்டு எழுதுக.**
* வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் *தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

110. **தோற்றுவிப்பாளர் என்பவர் யார் ?**
நிறுமத்தை தொடங்க ஏற்பாடுகளை செய்து மற்றும் தொடக்க செலவுகளை செய்து மேலும் நிறுமத்தை உருவாக்குபவரே தோற்றுவிப்பாளர் ஆவார்.

111. **பங்கு என்றால் என்ன ?**
ஒரு நிறுமத்தின் மொத்த பங்கு முதல் தொகையில் ஒரு பகுதி பங்காகும்.

112. **சாதாரணப் பங்கின் பொருள்தருக.**
முன்னுரிமை பங்குகள் இல்லாத பிற பங்குகள் சாதாரண பங்குகள் ஆகும்.

113. **முன்னுரிமைப் பங்குகள் பற்றி சிறுகுறிப்பு வரைக.**
நிறும கலைப்பின் போது பங்கு முதல் தொகையை திருப்பி பெறுவதில் நேர்மை பங்குதாரரை விட முன்னுரிமை பெற்ற பங்குகள் ஆகும்.

114. **பணியாளர் நலன் சாதாரண பங்குகள் என்றால் என்ன ?**
பணியாளர்அல்லது இயக்குநருக்காக தள்ளுபடியில் அல்லது ரொக்கமற்ற மறு பயனுக்காக வெளியிடும் சாதாரண பங்காகும்.

115. **பங்குச் சான்றிதழ் என்றால் என்ன ?**
பங்குதாரரின் உடமைக்கு உரிமைக்கு சாட்சியாக கருதப்படும் ஆவணமாகும்.

116. **கடன் பத்திரங்கள் என்றால் என்ன ?**
நிறுமத்தின் சொத்துகள் மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தியோ அல்லது ஏற்படுத்தாமலோ நிறுமம் வெளியிடும் பிணையமாகும்.

117. **இயக்குனர் என்பதை வரையறுக்க.**
ஒரு நிறுமத்தை நிர்வகிக்கும் குழுவிற்காக நியமிக்கப்பட்டவர் இயக்குனர் ஆவார்.

118. **முழுநேர இயக்குனர் என்பவர் யார் ?**
இயக்குனர் ஒருவர் தனது வேலை நேரம் முழுவதையும் நிறுமத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துபவரே முழுநேர இயக்குனர் ஆவார்.

119. **மேலாண்மை இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம் ?**
* இயக்குனர்களை கட்டுப்படுத்த உரிமைப் படைத்தவர்.
* நிறுமத்தில் மிகுந்த அதிகாரமும் சுதந்திரமும் கொண்டவர்.

120. **எந்த இயக்குனர் செயல் இயக்குனராக செயல்பட முடியும் ?**
ஒரு நிறுமத்தின் முதன்மை தலைமை அதிகாரி என்ற பொறுப்பை வகிப்பவர் செயல் இயக்குனராக செயல்படமுடியும்.

121. **செயலர் என்பவர் யார் ?**
நிறுவனத்தின் நிர்வாக பணிகளை செய்து முடிக்க தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ள ஒரு தனி நபரே செயலர் எனலாம்.

122. **கூட்டங்கள் வரையறுக்க.**
சட்ட விதிகளுக்கு உட்பட்டு முறையான வகையில் ஒருங்கிணைக்கப்படும் நபர்களின் குழுவை கூட்டம் எனலாம்.

**123. தீர்மானம் என்றால் என்ன ?**

ஒரு முடிவை நடைமுறைப்படுத்த சட்டப்படி பங்குதாரர்களால் அளிக்கப்படும் ஒப்புதலை தீர்மானம் என்கிறோம்.

**124. பகராள் சிறுகுறிப்பு வரைக.**

* பங்குநர் ஒருவருக்கு பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ளும் நபர்.
* இவருக்கு கூட்டத்தில் பேசும் உரிமை இல்லை. வாக்களிக்கும் உரிமை உண்டு.

**125. வாக்கு என்றால் என்ன ?**

ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ ஒருவர் தன் விருப்பத்தை பதிவு செய்வதாகும்.

## மூன்று மதிப்பெண்

**1. மேலாண்மை கலையா ? அறிவியலா ?**

மேலாண்மை கலையின் பண்புகளையும், அறிவியலின் பண்புகளையும் கொண்டுள்ளது. எனவே இது இரண்டின் தொகுப்பாகும்.

**2. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.**

| அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|
| 1. அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| 2.முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| 3.பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| 4.தொடர்பு | கொள்கைகளை செயல்படுத்தல் | கொள்கைகளை உருவாக்குதல் |
| 5.பணி | பணி நிர்வாகம் மற்றும் ஆளுமை | சட்டம் மற்றும் தீர்மானித்தல் |

**3. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை ?**

* அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல * இணக்கம் சச்சரவின்மை
* மனப்புரட்சி * தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு

**4. முடிவெடுத்தல் முக்கியமென்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள் ?**

ஒரு அமைப்பின் இலக்குகளை அடைய திறமையாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் முக்கியமாகும்.

**5. செயலூக்கமளித்தலின் நன்மைகளைக் குறிப்பிடுக.**

* நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
* பணியை விரைவாக செய்து முடிப்பது.
* பணியின் மீது விருப்பத்தை வளர்ப்பது.

**6. குறிப்பு வரைக. (அ) ஒழுங்கமைத்தல் (ஆ) பணிக்கமர்த்துதல்**

(அ) ஒழுங்கமைத்தல் : ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதாகும்.

(ஆ) பணிக்கமர்த்துதல் : பணியாளார்களை தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது.

**7. இயக்குதலின் முக்கியத்துவம் என்ன ?**

இலக்குகளை சாதிக்கும் பொருட்டு செயலூக்கமளித்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ் நிலை பணியாளார்களுடன் தொடர்புபடுத்துதல் ஆகியவையாகும்.

**8. நிதிச் சந்தையின் பொருள் வரைவிலக்கணம் தருக.**

எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள் சொத்துகள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக்கருவிகள் வியாபாரம் செய்யப்படுகிறதோ அதுவே நிதிச் சந்தையாகும்.

**9. உடனடி சந்தைக்கும் எதிர்நோக்கிய சந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக ?**

| உடனடி சந்தை | எதிர்நோக்கிய சந்தை |
|---|---|
| 1. இது உடனடியாக நடைபெறும் சந்தை | இது எதிர் கால சந்தை |
| 2. தீர்வு உடனடியாக நடைபெறும் | தீர்வு உடனடியாக நடைபெறாது |

**10. இரண்டாம் நிலைச் சந்தை சிறுகுறிப்பு வரைக.**

ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

**11. இந்தியாவில் நிதிச்சந்தையின் வரை எல்லையை விளக்குக.**

தனிநபர்களுக்கு, விவசாய துறைகளுக்கு, தொழில் துறைகளுக்கு, வங்கிகளுக்கு மற்றும் அரசுக்கு நிதி உதவிகளை வழங்குகிறது.

**12. மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகளை விளக்குக ?**

**முதல் நிலைச் சந்தை :** புதிய வெளியீடுகளுக்கான சந்தையாகும்.

**இரண்டாம் நிலைச் சந்தை :** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களின் மறுவிற்பனை சந்தையாகும்.

**13. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை ?**

* வெளியிடுபவர் * நிதி இரசீது * நீர்மைத்தன்மை
* முக்கிய ஆதாரம் * பண மேலாண்மை

**14. பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர் ?**

* பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள் * பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்
* வணிக வங்கிகள் * பொதுமக்கள் * மாநில அரசுகள்

**15. கருவூல இரசீதின் வகைகளை விவரி ?**

* 91 நாட்கள் கருவூல இரசீதுகள்
* 181 நாட்கள் கருவூல இரசீதுகள்
* 364 நாட்கள் கருவறை இரசீதுகள்

**16. வணிக இரசீதுகள் வகைகளை விவரி ?**

* தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்
* உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்
* இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்

**17. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி ?**

* பங்குப் பரிவர்த்தனையில் கட்டுப்பாடு இல்லாதது.
* உறுப்பிர்கள் மீது கட்டுப்பாடு இல்லாதது
* ஒரே இடத்தில் பல வகை கட்டணம் வசூலித்தல்

**18. காளைமற்றும் கரடி விளக்குக.**

காளை: பத்திரங்கள் எதிர்காலத்தில் விலை ஏற்றம் பெறும் என்று எதிர்பார்ப்பவர்.

கரடி: எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர்

**19. மான் மற்றும் முடவாத்து விளக்குக ?**

***கலைமான் :** ஒரு நிறுவனத்தின் பங்குகளை முனைமத்தில் வெளியிடும் போது அதைப் பெற்று விற்கக் கூடியவர்.

***முடவாத்து :** தம் நடவடிக்கையில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருப்பவர்.

**20. புறத்தோற்ற மற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?**

காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அளித்து பின்னர் அதற்கு சமமான பத்திரங்கள் முதலீட்டாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுவதாகும்.

**21. புறத்தோற்ற மற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களை கூறுக ?**

* பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கணக்கு துவங்க படிவத்துடன் அடையாள மற்றும் முகவரி நகல் சான்றுகளை சமர்பிக்க வேண்டும்.
* ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளார் அட்டை

**22. உள்வழி வர்த்தகம் என்றால் என்ன ?**

நிறுவனத்தின் இயக்குனர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளாகும்.

**23. மனிதவள மேலாண்மையின் பணிகளை கூறுக ?**

* திட்டமிடுதல் * அமைத்தல் * இயக்குவித்தல் * கட்டுப்படுத்துதல்

**24. ஆட்சேர்ப்பு வரையறு.**

உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் நிறுவன காலியிடங்களுக்கு திறன் வாய்ந்த நபர்களை கண்டறிவது.

**25. உள்மூல ஆட்சேர்ப்பின் அம்சங்கள் யாவை ?**

* இடமாற்றங்கள் * பதவி உயர்வு * பதவி இறக்கம் * ஓய்வு பெற்ற ஊழியர்கள்

**26. விளம்பரத்திற்கும் கோரப்படாத விண்ணப்பங்களுக்கும் இடையே உள்ள இரண்டு வேறுபாடுகள் தருக ?**

| விளம்பரம் | கோரப்படாத விண்ணப்பம் |
|---|---|
| ஊடகம் வழியாக விளம்பரம் செய்தல் | நிறுவனத்தை நேரடியாக நாடுகின்றனர் |
| காலிப்பணியிடம் முன்னரே தெரிவித்தல் | பணியிடம் முன்னரே தெரிவிப்பதில்லை. |
| பணியின் தன்மை அறிய முடியும். | பணியின் தன்மை அறிய முடியாது. |

**27. வேலைவாய்ப்பு இணையதளங்களின் முக்கியத்துவம் என்ன ?**

நிறுவனங்கள் தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை உலக அளவில் இணையத்தின் வாயிலாக பெற முடிகிறது.

**28. ஆட்சேர்ப்பு செயல்பாட்டில் உள்ள படிநிலைகளை கூறுக ?**

* ஆட்சேர்ப்பு திட்டமிடல் * காலிப்பணியிடங்களை தீர்மானித்தல் * வளங்களைக் கண்டறிதல் * விளம்பரம் உருவாக்குதல் * தேர்வுக்கு வழிவகுத்தல் * மதிப்பீடு

**29. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன ?**

விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையில் கேள்விகள் கேட்கப்பட்டு, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதித்தல் போன்றவை நடத்தப்படுவதாகும்.

**30. கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன ?**

* இது முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்படுகிறது.
* நேர்காணலில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் முன்கூட்டியே தயாரிக்கப்படுகிறது

**31. தேர்வுச் சோதனையின் வகைகள் யாவை ?**

* மனோபாவச் சோதனை * அடைவுச் சோதனை * நுண்ணறிவுச் சோதனை
* ஆர்வச் சோதனை * ஆளுமைச் சோதனை * செயல் திறன் சோதனை

**32. அடைவுச் சோதனை குறித்து நீவீர் அறிவது யாது ?**

குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையே அடைவுச் சோதனையாகும்.

**33. ஒரு பணியாளரின் மருத்துவப் பரிசோதனை ஏன் அவசியமாகிறது ?**

* சம்பந்தப்பட்ட வேலைக்கான உடல் தகுதி உடையவர் என அறிதல்.
* தொற்று நோய்களிலிருந்து பணியாளர்களின் உடல்நலனை பாதுகாத்தல்.
* நிறுவனத்தின் தேவையற்ற மருத்துவ செலவுகளை தடுத்தல்.

**34. மனோபாவச் சோதனை என்றால் என்ன ?**

குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட இது உதவுகிறது.

**35. உயர்மட்ட குழு நேர்காணல் ஏன் நடத்தப்படுகிறது ?**

விண்ணப்பதாரிடம் பலர் அடங்கிய ஒரு குழு நேர்காணல் செய்தால் அது உயர்மட்ட குழு நேர்காணல் ஆகும். இது உயர் பதவிக்காக அமைக்கப்படுகிறது.

**36. தேர்வு நேர்காணலின் வகைகளைப் பட்டியலிடுக.**

* ஆரம்ப நேர்காணல் * தொலைபேசி நேர்காணல் * காணொலி நேர்காணல்
* குழு நேர்காணல் * உயர்மட்ட நேர்காணல் * இணைய வழி நேர்காணல்

**37. தொழிற்சாலைக்குள் பயிற்சி என்றால் என்ன ?**

பயிற்சி நோக்கத்திற்காக உண்மையான வேலை சூழலைப் போல ஊழியருக்கு பயிற்சி அளிக்கும் முறையாகும்.

**38. பணிவழி பயிற்சி பற்றி நீ அறிவது யாது ?**

பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் அல்லது முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுவதாகும்.

**39. பயிற்சித் திட்டத்தில் பல்வேறு படிகளை எழுதுக ?**

* பயிற்சி யாருக்கு அளிக்க வேண்டும் *பயிற்சி பெறுபவர் யார் *பயிற்சியாளர் யார்
* பயிற்சியின் முறை என்ன * பயிற்சி திட்டத்தை நடத்துவது எங்கே

**40. பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

பயிற்சி அளிப்பவர் : பணியாளருக்கு திறன்களை போதித்து பணியை தயார் செய்பவர்
பயிற்சி பெறுபவர் : ஒரு வேலையின் திறனை கற்றுக் கொள்ளும் நபர் ஆவார்.

**41. சந்தையில் என்னென்ன பொருட்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும்.**

* பண்டங்கள் * பணிகள் * நபர்கள் * இடம் *அமைப்பு * தகவல்

**42. சந்தையிடுகையாளரின் பங்களிப்பு ஏதேனும் ஐந்தினை குறிப்பிடுக.**

* தூண்டுபவர் * புதுமை புகுத்துநர் * ஒருங்கிணைப்பாளர் * செயல்பாட்டாளர்

**43. சந்தையிடுகையாளர் ஓர் புதுமை கண்டுபிடிப்பாளரா ? நீர் அதை ஏற்றுக்கொள்வீரா ?**

ஆம், சந்தையிடுகையாளர் நடைமுறைக்கு ஏற்ற வகையில் தொழில் முறையில் மாற்றம் உற்பத்தி முறையில் மாற்றம் செய்து வருகிறார்.

**44. சந்தைக்கு வாடிக்கையாளர்கள் ஆதரவு ஏன் தேவைப்படுகிறது ?**

* சந்தையை விரிவடையச் செய்தல்
* பொருட்களின் விற்பனையை அதிகரித்தல்
* இலாபத்தை அதிகரிக்க செய்தல்

**45. காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய் ?**

* மிக குறுகிய கால சந்தை : மிக குறுகிய காலத்தில் பயன்படுத்தும் பொருட்கள் மட்டும் கையாளுதல்.
* குறுகிய கால சந்தை : வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ செயல்படுவது.
* நீண்ட கால சந்தை : நீடித்து உழைக்கக்கூடிய பொருட்களை கையாளுதல்.

**46. சந்தையீட்டாளரின் பணிகளை பட்டியலிடுக.**

* தகவல்களை சேகரித்து ஆராய்தல் * சந்தை திட்டமிடுதல் * கட்டுமானம் செய்தல் * வர்த்தக குறியீடு செய்தல் * விலை நிர்ணயம் செய்தல்

**47. பொருளின் விலையை பாதிக்கும் காரணிகள் யாவை ?**

* வாடிக்கையாளரின் மனப்பாங்கு * நுகர்வோரின் தேவை
* வழங்கல் வழிகள் * பொருளாதார சூழல்

**48. சந்தையிடுகை கலவை என்பது பற்றி நீவீர் அறிவது யாது ? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும் ?**

சந்தையிடுகை கலவை மூலம் நிறுவனம் தனது நுகர்வோர்களை குறிவைத்து அதன் மூலம் இலாபம் ஈட்டுவதாகும்.

பொருள் : பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

விலை : விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாகும்.

**49. சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை ?**

* சமூக நலனை பாதுகாப்பது.
* சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் காரணிகளை நீக்குதல்.
* மக்களுக்கு தரமான வாழ்க்கை தரத்தை உயர்த்துவது.

**50. மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை ?**

* சந்தையை விரிவாக்கம் செய்தல்.
* விற்பனைச் செலவைக் குறைத்தல்.
* தகவல் தளத்தை பயன்படுத்துதல்.

**51. வணிகத்தின் மூன்று முக்கிய கூறுகள் யாவை ?**

* உற்பத்தியாளர் * நுகர்வோர் * அரசாங்கம்

**52. செயற்கை பற்றாக்குறை என்றால் என்ன ?**

தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்துக் கொண்டு தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை என பெயர் பலகை வைப்பதாகும்.

**53. நுகர்வோரியலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக ?**

* சுரண்டல்களிருந்து பாதுகாத்தல்
* அரசின் கவனத்தை ஈர்த்தல்
* நியாயமற்ற வணிக நடைபெறும் எதிர்த்தல்

**54. நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் பங்கு யாது ?**

மத்திய மாநில அரசுகள் நுகர்வோரைப் பாதுகாக்க நாடு முழுவதும் பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது.

**55. நுகர்வோர் உரிமைகள் வரையறு ?**

* பாதுகாப்பில் உரிமை * தகவல் பெறும் உரிமை
* தேர்ந்தெடுக்கும் உரிமை * கேட்கும் உரிமை

**56. நுகர்வோர் பாதுகாப்பு அவசியமா ?**

நுகர்வோர் பாதுகாப்பு அவசியம். காரணங்கள் பின்வருமாறு, முறைகேடான வர்த்தகம், தவறான விளம்பரம் மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள்.

**57. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி ?**

* 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்கள்.
* அவர்களில் ஒருவர் நீதித்துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்
* ஏனைய நபர்கள் பிற துறையில் இருக்க வேண்டும்.
* பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்

**58. மாநில ஆணையத்தின் உச்ச நிதி அதிகார வரம்பு என்ன ?**

ரூ.20 லட்சத்திற்கு மேல் ஒரு கோடிக்குள் விற்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை தொடர்பாக எழும் குறைபாடுகளுக்கான மனுக்களை விசாரித்தல்.

**59. மாவட்ட மன்றம் ரூ.20 லட்சம் வரம்பு மீறுகிறது நிலைமையை விளக்குங்கள் ?**

புகாரின் மதிப்பு ரூ.20 லட்சத்துக்கு மேல் இருந்தால் மாநில ஆணையத்தில் தான் புகார் அளிக்கப் பட வேண்டும்.

**60. விற்பனை உடன்பாடு என்றால் என்ன ?**

உரிமையை எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு விற்பனை உடன்பாடு எனப்படும்.

**61. தற்போதைய சரக்கு என்பதை விவாதிக்க ?**

ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசமுள்ள சரக்கு ஆகும்.

**62. மாற்றுமுறை ஆவணத்தின் தன்மைகள் யாவை ?**

* மாற்றித்தரும் தன்மை
* மறுபயன் கருதி வரையப்பட்டிருக்க வேண்டும்
* எழுதுபவர் கையொப்பமிட வேண்டும்

**63. மாற்றிச்சீட்டின் சிறப்பியல்புகளை கூறுக ?**

* மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.
* மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம் இடவேண்டும்.
* யாருக்கு செலுத்தப்பட வேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிடுதல்.

**64. மாற்றுச்சீட்டு மற்றும் கடனுறுதிச்சீட்டு வேறுபடுத்துக.**

| அடிப்படை | மாற்றுச்சீட்டு | கடனுறுதிச்சீட்டு |
|---|---|---|
| உறுதிமொழி | இது நிபந்தனையற்ற ஆவணம் | இது பணம் தருவதற்கான உறுதிமொழி |
| வரைபவர் | கடனாளர் | கடனாளி |
| நிபந்தனை | நிபந்தனைக்கு உட்படுத்தலாம் | நிபந்தனைக்கு உட்படுத்த முடியாது |

**65. இரண்டு வகை கீறல்களை விவரி ?**

*பொதுக்கீறலிடல் : காசோலையின் இடது மேல் மூலையில் இரு சாய் கோடுகளிடுவது
*சிறப்புக் கீறலிடல் : ஒரு வங்கியின் பெயரை சேர்த்து காசோலையில் கீறலிடுவது.

**66. தொழில் முனைவோர் வரைவிலக்கணம் தருக ?**

தொழில் முனைவோரை புதிய படைப்பாளி என்கிறோம். ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்குபவரே தொழில் முனைவோர் ஆவார்.

**67. தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுத்தி காட்டுக.**

| | தொழில் முனைவோர் | மேலாளர் |
|---|---|---|
| 1. | தொழிலை தொடங்குபவர் | தொழிலில் பணிபுரிபவர் |
| 2. | உரிமையாளர் | உழைப்பாளி |
| 3. | இலாபம் பெறுபவர் | ஊதியம் பெறுபவர் |

**68. தொழில் முனைவோர் மற்றும் அகத் தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக.**

| | தொழில் முனைவோர் | அகத் தொழில் முனைவோர் |
|---|---|---|
| 1. | தடையற்ற சிந்தனை வாசி | தன்னிச்சையான சிந்தனை வாசி |
| 2. | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்தது |
| 3. | நிதியை திரட்ட வேண்டும் | நிதியை திரட்ட வேண்டியதில்லை |

**69. அரசியல் சூழல் என்றால் என்ன ?**
அரசின் நடவடிக்கை மற்றும் ஆட்சி மாற்றம் போன்றவற்றால் தொழில் நிறுவனத்தில் மாற்றம் ஏற்படுவதாகும்.

**70. தூய தொழில் முனைவோருக்கு சில உதாரணங்கள் தருக ?**
* அம்பானி * ஜாம்செட் டாடா * டி வி சுந்தரம் ஐயங்கார் * சேஷாத்திரி * பிர்லா

**71. தொழில் முனைவையே தொழிலாகக் கொண்ட முனைவோர் எப்படி செயல்படுகிறார்.**
ஒரு தொழிலை வெற்றிகரமாக உருவாக்கி அதை பிறருக்கு விற்று, வேறு தொழிலை துவக்கி அதை நன்றாக வளர்த்து பின் அதையும் விற்பனை செய்வதை வழக்கமாகக் கொண்டவர்.

**72. வேளாண் தொழில் முனைவோரைப் பற்றி சுருக்கமாக எழுதுக ?**
வேளாண் பொருட்களை விளைவித்து சந்தையிடும் தொழிலை முனைகின்றவர்.

**73. எழுந்திரு இந்தியா என்றால் என்ன ?**
பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மகளிருக்கு நிறுமக் கடன் வழங்கி அவர்களை பொருளாதாரத்தில் மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

**74. பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவீர் அறிவது யாது ?**
ஒரு நிறுமம் முக மதிப்பிற்கு கூடுதலான ஒரு விலைக்கு பங்குகளை விற்பதாகும்.

**75. பங்குகளை வட்டத்தில் வெளியிடுவது என்றால் என்ன ?**
**அப்படி வெளியிட நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் யாவை ?**
* ஒரு நிறுமம் தனது பங்கை முக மதிப்பை விட குறைத்து வெளியிடுவதாகும்.
* நிறுமச் சட்டத்தின் படி தள்ளுபடியில் பங்குகளை வெளியிடுதல் தடையாகும்.

**76. பல்வேறு வகையான முன்னுரிமைப் பங்குகளை சுருக்கமாகக் கூறுக ?**
**மீள்தகு முன்னுரிமை பங்குகள் :** தவணை நாள் முடிந்து பெறக்கூடிய பங்குகள்.
**மீள்தாக முன்னுரிமை பங்குகள் :** நிறுமக் கலைப்பின் போது பெறக்கூடிய பங்குகள்.
**மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள் :** ஒரு குறிப்பிட்ட காலத்தில் சாதாரண பங்குகளாக மாற்ற கூடிய பங்குகள்.

**77. எப்பொழுது மாற்று இயக்குனர்களை நியமிக்கலாம் ?**
ஒரு இயக்குனர் இந்தியாவில் மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால் அவருக்கு பதிலாக மாற்று இயக்குனர்களை இயக்குனர் குழு நியமிக்கலாம்.

**78. நிழல் இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம் ?**
இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர் நிழல் இயக்குனர் ஆவார்.

**79. சாதாரணமான காலிப் பணியிடங்கள் என்றால் என்ன ?**
பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களால் நியமிக்கப்பட்ட ஒரு இயக்குனர் பதவியை ராஜினாமா செய்தாலோ அல்லது இருந்தாலோ ஏற்பட்ட காலியிடத்தை சாதாரணமான காலிப்பணியிடம் எனலாம்.

**80. ஒரு தனியார் கம்பெனியில் குறைந்த அளவு எத்தனை இயக்குனர்கள் இருக்க வேண்டும் என்பதை குறிப்பிடுக ?**
* தனியார் நிறுமத்திற்கு – 2 இயக்குனர்கள்
* ஒரு நபர் நிறுமத்திற்கு – 1 இயக்குனர்

**81. முதல் இயக்குனர் என்பவர் யார் ?**
* இவரது பெயர் வழக்கமாக நிறும செயல்முறை ஏட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
* இவரே முதல் இயக்குனர் ஆவார்.

**82. எப்பொழுது இயக்குனர் தனது அலுவலகத்திலிருந்து நீக்கப்படுகிறார் ?**
*மோசடி செய்தல் *தவறாக செயல்படுதல் மற்றும் கவனமின்மை *தவறான நிர்வாகம்

**83. யார் இயக்குனரை நீக்குகிறார் ?**
* பங்குதாரர்கள் * மத்திய அரசு * நிறும சட்ட வாரியம்

**84. மேலாண்மை இயக்குனர் வரையறு ?**
*நிறுமத்தில் அதிகப்பட்ச அதிகாரங்களைக் கொண்டவர்.
*நிறுமத்தை வழிநடத்தும் மற்றும் இயக்குனர்களை கட்டுப்படுத்தும் உரிமை பெற்றவர்.

**85. சிறப்பு தீர்மானம் என்றால் என்ன ?**
ஒரு முடிவை நிறைவேற்ற கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள பங்குனர்களின் எண்ணிக்கையில் 75 சதவீதம் நபர்கள் முடிவிற்கு சாதகமாக வாக்களிப்பதாகும்.

**86. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன ?**
பொது நிறுமம் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் பங்குநர்கள் முதலாவது கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**87. வாக்கெடுப்பு குறித்து நீங்கள் அறிந்து கொண்டது என்ன ?**
ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ ஒருவர் தனது விருப்பத்தை உரிய முறையில் பதிவு செய்வதாகும்.

**88. சாதாரண தீர்மானம் தேவைப்படும் மூன்று செயல்பாடுகளை தருக ?**
* தனது பெயரை திருத்த * இயக்குனர்களை பணியமர்த்த
* நிறும பங்கு முதலை மாற்றியமைக்க

**89. குரல் வாக்கெடுப்பு என்றால் என்ன ?**
தலைவர் ஒரு முடிவை முன்மொழிந்து அதற்கு ஆதரவாக உள்ளவர் ஆம் எனவும் மறுப்பவர்கள் இல்லை எனவும் குரலை உயர்த்தி கூறுவதாகும்.

## ஐந்து மதிப்பெண்

**1. மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது ?**
மேலாண்மை என்பது பன்னோக்கு செயல். அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. பணியாளரையும் பணியையும் மேலாண்மை செய்கிறது. – பீட்டர் டிரக்கர்.

**பணிகள்:**
❖ வணிகத்தை மேலாண்மை செய்தல்.
❖ மேலாளரை மேலாண்மை செய்தல்.
❖ பணியாளர்களையும் பணியையும் மேலாண்மை செய்தல்.

**பங்களிப்பு :**
❖ மேற்கூறிய மூன்றையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.
❖ மேலாளர் சூழ்நிலைக்கு ஏற்ப வணிகத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்
❖ மேலாளர் வியாபாரத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும்
❖ மேலாளர் மனித வளங்களையும் நிதி வளங்களையும் ஒதுக்கிடு செய்தல்.

**2. அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள் யாவை ?**
**i) அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல :** அறிவியல் பூர்வ வேலை பகுப்பாய்வின் படி தெரிவு செய்தல். பணியாளரிடம் பணியை ஒப்படைத்தல்
**ii) இணக்கம் சச்சரவு இன்மை :** மேலாண்மையும் பணியாளர்களும் ஒற்றுமையாக இருத்தல். உபரி இலாபத்தை பணியாளர்களுடன் பகிர்தல்.

**iii) தனி மனிதத்துவம் அல்ல ஒத்துழைப்பு :** பரஸ்பர நம்பிக்கை நல்லெண்ணம் இருத்தல். பணியாளர்களும் முக்கிய முடிவுகளில் பங்கேற்க வேண்டும்.

**iv) மனப்புரட்சி :** மேலாளர் பணியாளர்களிடம் வெளிப்படைத் தன்மை இருத்தல். வேலை நிறுத்தத்தில் பணியை மேற்கொள்ளுதல்.

**v) திறனை வளர்த்து வளர்ச்சியடைதல் :** திறனை வளர்க்க உரிய பயிற்சி அளித்தல் சிறந்த பணியாளர்களை தேர்வு செய்தல்.

**3. நவீன மேலாண்மை கோட்பாடுகளை விவரி ?**

**i) வேலைப் பகிர்வு :** தொழில் அமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ii) ஒழுங்குமுறை :** கீழ்ப்படிதல், முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**iii) கட்டளையொருமை :** ஒவ்வொரு பணியாளரும் ஒரே ஒரு மேல் அதிகாரியிடம் இருந்து மட்டுமே கட்டளைகளை பெறவேண்டும்.

**iv) ஆணையுரிமை வரிசை :** உரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடம் இருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ் நோக்கி வரவேண்டும் ம்

**v) ஊதியம் :** ஊதியம் என்பது பணியாளர்களின் பணி கொடுக்கப்படும் விலையாகும்.

**4. மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக ?**

**i) திட்டமிடல் :** முன்கூட்டியே முடிவெடுத்தல். வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடு செய்தல்.

**ii) ஒழுங்கமைத்தல் :** உறுப்பினர்கள் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துதல். பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல்.

**iii) பணியமர்த்தல் :** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல். குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல் மற்றும் ஊக்கமளித்தல்.

**iv) இயக்குவித்தல் :** இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல். கூட்டம், கயேட, சுற்றறிக்கை மூலம் தகவல்களை அளித்தல்.

**v) ஒருங்கிணைத்தல் :** பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல். அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

**5. சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி ?**

**i) பண்டமாற்று முறை :** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொள்வது.

**ii) உற்பத்தி சார்ந்தது :** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு செய்யப்பட்டது.

**iii) விற்பனை சார்ந்தது :** விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

**iv) சந்தையிடுகை சார்ந்தது :** வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

**v) நுகர்வோர் சார்ந்தது :** நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**6. சந்தையிடுகை ஏன் சமுதாயத்திற்கும் மற்றும் தனி நிறுவனத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை விளக்குக ?**

**(அ) சமுதாயத்திற்கு :**

- ❖ உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை இணைத்தல்
- ❖ மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்
- ❖ நாட்டின் வருமானத்தை உயர்த்துதல்
- ❖ வேலை வாய்ப்புகளை அதிகரிக்க உதவுதல்
- ❖ நவீன சாகுபடி உற்பத்திக்கு வழிவகை செய்தல்

**(ஆ) தனி நிறுவனம் :**

- ❖ அமைப்பின் வருமானத்தை அதிகரித்தல்
- ❖ தொழில் மேம்பாடு அடையச் செய்தல்
- ❖ மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்

**7. சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.**

**i) பொருள் :** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

**ii) விலை:** விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாகும்.

**iii) இடம் :** சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் முக்கியமாகும்.

**iv) விற்பனை மேம்பாடு :** விளம்பரம் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

**8. பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது விளக்குக ?**

| | மின் சந்தைப்படுத்துதல் | பாரம்பரிய சந்தைப்படுத்துதல் |
|---|---|---|
| 1. | பொருட்கள் மிக விரைவாக மேம்படுத்த முடியும். | பொருட்கள் மிக தாமதமாக மேம்படுத்த முடியும். |
| 2. | பொருட்களை குறைந்த செலவில் மேம்படுத்த முடியும். | பொருட்களை அதிக செலவில் மேம்படுத்த முடியும். |
| 3. | மிக எளிதாக பொருள்களை சந்தையிட முடியும் | மிக எளிதாக பொருள்களை சந்தையிட முடியாது. |
| 4. | மிக குறைந்தளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுபடுத்தலாம். | அதிக அளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுபடுத்தலாம். |
| 5. | வார 7 நாட்கள் 24 மணி நேரமும் சந்தையிட முடியும். | வார 7 நாட்கள் 24 மணி நேரமும் சந்தையிட முடியாது. |

**9. மின்னணு விற்பனையில் நன்மை தீமைகளை விளக்குக ?**

**நன்மைகள்:**

- ❖ மின் சந்தை வாரத்தின் 7 நாட்கள் 24 மணி நேரமும் சந்தையிட முடியும்.
- ❖ தாயாரிப்பாளர் மற்றும் நுகர்வோர் நேரடியாக செயல்படுவதால் காலமும், செலவும் குறைவு.
- ❖ உலக அளவில் மிக எளிதாக பொருள்களை சந்தையிட முடியும்.
- ❖ மிக குறைந்தளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுபடுத்தலாம்.

**தீமைகள் :**

- ❖ விளம்பரம் செய்யவும் வணிகத்தளம் அமைக்கவும் பெரிய அளவில் செலவிட வேண்டும்.
- ❖ இது சிறிய நிறுவனத்திற்கு பொருந்தாது.
- ❖ தகவல்களை அவ்வப்போது புதுப்பிப்பது மிகவும் கடினம்.

**10. சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது ? விவரி ?**

i) **குடும்பச் சந்தை :** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

ii) **உள்ளூர் சந்தை :** ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்பவரும் உள்ளூரிலேயே பங்கேற்பது.

iii) **ஒழுங்கு முறை சந்தை :** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iv) **மிக குறுகிய கால சந்தை :** மிக குறுகிய காலத்தில் பயன்படுத்த கூடிய பொருட்கள் மட்டுமே கையாளப்படுகிறது.

v) **குறுகிய கால சந்தை :** இவ்வரை சந்தையானது வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ செயல்படும்.

vi) **நீண்டகால சந்தை :** நீடித்து உழைக்கக்கூடிய பொருட்களை கையாளதக்க வகையில் உள்ள சந்தையாகும்.

vii) **முறையான சந்தை :** இவ்வகை சந்தையில் ஒரே தன்மை கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரே விதமான விலையில் கையாளப்படுகிறது.

viii) **முறையற்ற சந்தை :** இதில் பல்வகை பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டு செயல்படுகிறது.

**11. நுகர்வோர்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் ?**

i) **அதிக விலைக்கு விற்றல் :** பொருளின் விலையை விட கூடுதலான விலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

ii) **கலப்படம் :** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

iii) **போலியான பொருட்கள் :** மக்கள் மத்தியில் பிரபலமடைந்த பொருட்களை போலியாக தயாரித்து விற்பனை செய்தல்.

iv) **செயற்கை பற்றாக்குறை :** நிறுவனங்கள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இல்லை என செயற்கை பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

v) **பொய் விளம்பரங்கள் :** விளம்பரம் மூலம் பொருட்கள் குறித்த தவறான கருத்துகளை பரப்புகின்றனர்.

**12. நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக ? (அல்லது)**
**நுகர்வோர் பாதுகாப்பின் தேவைகள் யாவை ?**

i) **விலை உயர்வை தவிர்த்தல் :** வணிக நிறுவனங்கள் பொருட்கள் பற்றாக்குறையின் போது விலை உயர்வை தவிர்க்க வேண்டும்.

ii) **பதுக்கலை தவிர்த்தல் :** பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தை மூலம் அதிக இலாபம் ஈட்டுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

iii) **பொருட்கள் குறித்த தகவல் அளித்தல் :**
வணிக நிறுவனங்கள் பொருட்களைப் பற்றியும் அவற்றைப் பயன்படுத்தும் முறை பற்றியும் சரியான தகவல்களை நுகர்வோருக்கு தர வேண்டும்.

iv) **விளம்பரங்களில் உண்மை :** பொருள்கல் மீது விளம்பரம் செய்யும் பொழுது பொய்யாகவோ உண்மைக்குப் புறம்பாகவோ இருக்கக் கூடாது.

v) **தீங்குகளிலிருந்து பாதுகாத்தல் :** வணிக நிறுவனங்கள் ஆபத்தான மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களை சந்தைப்படுத்த கூடாது.

**13. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 சிறப்பியல்புகள் யாவை ? (அல்லது)**
**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 – ன் நோக்கங்கள் யாவை ?**

i) நுகர்வோருக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்.

ii) நுகர்வோர் வாங்கும் பொருட்களின் தரம், அளவு, விலை போன்றவற்றை உறுதி செய்தல்.

iii) சுரண்டல், பொய்யான மற்றும் தவறான தகவலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.

iv) வணிகர்களின் நியாயமற்ற மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளில் இருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.

v) தரமான பொருட்கள் மூலம் நுகர்வோர்களின் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துதல்.

**14. நுகர்வோரின் உரிமைகள் யாவை ?**

i) **உடல் நல பாதுகாப்பு உரிமை :** உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பொருட்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு.

ii) **தகவல் பெறும் உரிமை :** நுகர்வோர் பொருட்களை வாங்கும்போது அப்பொருள் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் கேட்கும் உரிமை உண்டு.

iii) **தேர்ந்தெடுக்கும் உரிமை :** தனக்கு தேவையான பொருட்களை தரம், விலை அடிப்படையில் தேர்ந்தெடுத்து எடுக்கும் உரிமை உண்டு.

iv) **செவிமடுக்கும் உரிமை :**
நுகர்வோர் பொருட்களை பற்றிய தனது கருத்துக்களை கூறும் உரிமை உண்டு.

v) **நிவாரணம் காணும் உரிமை :** தவறான வணிக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நுகர்வோர் நிவாரணம் கேட்க உரிமை உண்டு.

**15. நுகர்வோரின் கடமைகளை விளக்குக ? (அல்லது)**
**நுகர்வோரின் பொறுப்புகள் யாவை ?**

i) **தரமான பொருட்கள் மற்றும் நியாயமான விலை:**
நுகர்வோர் தரமான பொருட்களைப் பெற்றுக்கொண்டு பொருட்களுக்கான நியாயமான விலையை நுகர்வோர் செலுத்த வேண்டும்

ii) **பொருட்களின் எடை அளவு உறுதி செய்தல் :** நுகர்வோர் பொருட்களை வாங்குவதற்கு முன்பாக விலை, தரம், அளவு ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும்

iii) **ரொக்க ரசீது :** நுகர்வோர் பொருட்களை வாங்கும் பொழுது விற்பனையாளர் இடமிருந்து பொருட்களுக்கான ரொக்க ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

iv) **தவறான விளம்பரம் :** விளம்பரங்கள் மூலம் பொருட்களின் தரம் மிகைப்படுத்தி காண்பிக்கப்பட்டால் அதை நுகர்வோர் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

v) **தரமான பொருட்களை வாங்குதல் :** நுகர்வோர் தரமான பொருட்களை தர குறியீட்டுடன் வாங்குதல் பாதுகாப்பானதாகும்.

**16. விற்பனை ஒப்பந்தத்தில் அடிப்படை கூறுகளை கூறி விளக்குக ?**

i) **இருதரப்பினர் :** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.

ii) **பொருளின் மீதான உரிமை மாற்றம் :** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக்கொண்டு மாற்றித் தர வேண்டும்.

iii) **சரக்கு :** அசையும் சொத்துக்கள் அனைத்துமே சரக்கு ஆகும்.

**iv) விலை :** பொருளின் விற்பனைக்கான மறுபயன் விலையாகும்.

**v) விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு :** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடு ஆகும்.

**17. விற்பனை மற்றும் விற்பனை ஒப்பந்தம் வேறுபடுத்துக ?**

| | விற்பனை | விற்பனை ஒப்பந்தம் |
|---|---|---|
| 1. | பொருளின் உரிமை உடனடியாக மாறும். | பொருளின் உரிமை எதிர்காலத்தில் மாற்றப்படுகிறது. |
| 2. | விற்ற பொருள் சேதமுற்றால் நட்டம் வாங்குபவரை சாரும். | விற்ற பொருள் சேதமுற்றால் ஏற்பட்ட நட்டம் விற்பனையாளரை சாரும். |
| 3. | இது ஒரு நிறைவேறிய ஒப்பந்தம். | நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம். |
| 4. | வாங்குனர் நொடிப்பு நிலை அடைந்து விட்டால் அப்பொருளை கலைப்பு அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் | இங்கு உரிமையானது வாங்குனருக்கு மாற்றப்படவில்லை. |
| 5. | விலையை செலுத்தாத பட்சத்தில் வாங்குனர் மீது வழக்கு தொடக்கலாம் | ஒப்பந்தத்தை மீறினால் பொருளைக் கைப்பற்றி, வழக்கு தொடுக்கலாம். |

**18. காசோலையின் இயல்புகளை கூறி விளக்குக ?**

**i) எழுத்து வடிவில் இருத்தல் :** காசோலையை எழுத்து வடிவில் வரையப்பட்டிருக்க வேண்டும். வங்கியர் காசோலை அச்சிட்டு தருகிறார்கள்.

**ii) குறிப்பிட்ட வங்கியர் மீது வரைதல் :** காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும்.

**iii) நிச்சயமான ஒரு தொகை :** வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும்படி ஆணையிட வேண்டும்.

**iv) கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது :** காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்படல் வேண்டும்.

**v) எழுதுபவர் கையொப்பம் :** காசோலையில் எழுதுபவர் கையொப்பம் இட வேண்டும்.

**19. செலுத்தகு மேலெழுதுதலின் அடிப்படை கூறுகளை கூறுக ?**

**i)** ஆவணத்தை மையால் எழுதுவதே நல்லது. பென்சிலால் எழுதினால் மோசடி நடக்க வாய்ப்புண்டு.

**ii)** மேலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுதல் வேண்டும்.

**iii)** ஆவணத்தின் முழு மதிப்பிற்கும் மேலெழுதப்படல் வேண்டும்.

**iv)** எழுதப்படிக்க தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரலை பதித்தால் போதும்.

**v)** பெரிய எழுத்தில் கையொப்பம் இடுவது முறையான மேலெழுத்து ஆகாது.

**20. பல்வேறு மேலெழுதிடும் முறையின் பிரிவுகளை விவரிக்க ?**

**i) வெற்று மேலெழுத்து :** மேலெழுத்து யாருக்காக செய்யப்படுகிறதோ அவர் பெயரைக் குறிப்பிடாமல் கையெழுத்திடுவது.

**ii) சிறப்பு மேலெழுத்து :** குறிப்பிட்ட நபருக்கு செலுத்தும்படி எழுதி கையெழுத்து இடுவது.

**iii) வரையறு மேலெழுத்து :** ஆவணத்தை மேலும் ஆவணமாற்றம் செய்வதை தடுக்க எழுதப்படுவது.

**iv) பொறுப்பு தவிர் மேலெழுத்து :** மேலெழுதுபவர் வெளிப்படையான வார்த்தைகளால் தனது பொறுப்பினை தவிர்த்துவிடுதலாகும்.

**v) பகுதி மேலெழுத்து :** ஆவணத்தில் உள்ள தொகையில் ஒரு பகுதியை மட்டும் மாற்றுமாறு மேலெழுதுவது.

**21. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க**

**i) நிதிப் பிரச்சனை :** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதி பற்றாக்குறையை சமாளிப்பது மிக பெரிய சவாலாக உள்ளது.

**ii) ஆதரவு இன்மை :** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள், அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**iii) கடும் போட்டி :** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழிலில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**iv) கல்வியறிவு இன்மை :** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**v) சார்ந்து வாழும் கலாச்சாரம் :** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**22. ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.**

**i) ஸ்டாட்டப் இந்தியா :** தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது ஆதரவு அளிப்பது.

**ii) இந்தியாவில் தயாரிப்பு திட்டம் :** இதன் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது.

**iii) அடல் புதுமை புகுத்துதல் திட்டம் :** பன்னாட்டு தரத்திற்கு இணையாக புதுமையான பொருட்களை வடிவமைப்பது, ஊக்குவிப்பது, வளர்ப்பது ஆகும்.

**iv) ஜன்தன் ஆதார் மொபைல் :** அரசு திட்டங்களில் பயன் பெரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை நேராக அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்துவது.

**v) டிஜிட்டல் இந்தியா :** அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்படுகிறது.

**23. புதிய தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக படிநிலைகளை விளக்குக**

**i) பொருள் தேர்வு :** திறன், உள்நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தயாரிப்பை ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

**ii) இடத் தேர்வு :** தொழில் முனைவோர் தனக்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

**iii) மூலதன கட்டமைப்பை தீர்மானித்தல் :** சொந்த சேமிப்பு மற்றும் கடன்கள் மூலம் மூலதனத்தை திரட்ட முடியும்.

**iv) நிரந்தர பதிவு சான்று பெறுதல் :** உற்பத்தி தொடங்கி தயாரானவுடன் நிரந்தர பதிவு சான்றிதழ் பெற முடியும்.

**v) சட்டபூர்வ உரிமை :** நகராட்சி உரிமம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பெறவேண்டும்.

**அரசு மேல்நிலைப் பள்ளி, பெலாந்துறை.**